# VISWAKARMA SANADHANA DHARMA TRUST

## (RELIGIOUS TRUST)

Our ABVM national Leader's interview has been published in the Tuklak edition.



# அள்ளிக் கொடுக்கும் கைகள்

யோகேஸ்வரன் மூன்று வயதில் இருக்கும் போதுதான் அவனுக்கு தொண்டையில் ஏதோ குறைபாடு இருக்கிறதோ என்று சந்தேகப்பட்டு வீட்டருகில் இருந்த மருத்துவரிடம் காண்பித்தார் தந்தை சாய்பாபு. "கவலைப்படாதீங்க... தைராய்டு பிரச்சனை மாதிரி இருக்கு; பையனோட உணவுப்பழக்கம், செயல்பாடுகள் போன்றவற்றை கூர்ந்து கவனித்து வாருங்கள். ஏதேனும் மாற்றம் இருந்தால் காண்பியுங்கள்" என்று சில மாத்திரைகளை எழுதிக்கொடுத்தார் மருத்துவர். அப்புறம் ஒன்றும் பெரிய பிரச்சனை ஏதுவுமில்லை. படிப்பில் படுசுட்டியாக வளர்ந்தான் யோகேஸ்வரன். பத்தாவது படிக்கும் போது பள்ளியிலிருந்து ஆசிரியர் சாய்பாபுவை வந்து பார்க்கச் சொன்னார். "பையனுக்கு தொண்டையிலிருந்து ஏதோ திரவம் கசிவது போலத் தெரிகிறதே... அது என்ன என்று பாருங்கள்" என்றார் ஆசிரியர். பல மருத்துவர்களிடம் மகனைக் காண்பித்தார் சாய்பாபு. "அறுவை சிகிச்சை செய்ய வேண்டும்; ஐம்பதாயிரம் ரூபாய் ஆகும்" என்றார்கள் மருத்துவர்கள்.

ஓட்டுனர் வேலை செய்து வந்த சாய்பாபு திடீரென்று அவ்வளவு பணத்துக்கு எங்கே போவார்? அப்போது தான் நண்பர் ஒருவர், மருத்துவம், கல்வி ஆகியவற்றுக்கு நிதி உதவி அளிக்கும் **விஸ்வகர்மா சனாதன தர்ம அறக்கட்டளைப்** பற்றி சாய்பாபுவிடம் சொன்னார். உடனே அறக்கட்டளை தலைவர் முருகசெல்வத்தைச் சந்தித்து பையனின் பிரச்சனையைச் சொல்லி உதவி கேட்டார் சாய்பாபு. ஒரு மருத்துவமனையை தொடர்புகொண்டு அறுவைச்சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தார் முருகசெல்வம். ஐம்பதாயிரம் செலவை அவரது அறக்கட்டளை ஏற்றுக்கொண்டது. "என்ன செய்வதென்று திக்கு தெரியாமல் நின்ற போது தெய்வம் போல வந்து உதவி செய்தார் ஐயா முருகசெல்வம்" என்று நெகிழ்ந்து போய் சொல்கிறார் சாய்பாபு. இப்போது SSLC இறுதி தேர்வுக்கு சுறுசுறுப் பாக தயாராகிக் கொண்டிருக் கிறான் யோகேஸ்வரன்.

D.முருகசெல்வம்

யோகேஸ்வரனுக்கு மட்டுமல்ல, அவனைப் போலவே அறுவைசிகிச்சை, மருத்துவ சிகிச்சை தேவைப்பட்ட நூற்றுக்கணக்கானவர்களுக்கு நிதியுதவி செய்து வருகிறது முருகசெல்வம் நடத்தும் அறக்கட்டளை. மதுரையைச் சேர்ந்த முருகசெல்வம் கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு காலமாக கட்டிடத் தொழில் செய்து வருபவர். "நானும் ரொம்ப ஏழ்மை நிலையிலிருந்து வந்தவன் தான். நாங்கள் விஸ்வகர்மா வகுப்பைச் சேர்ந்தவர்கள். வரலாற்று பெருமையும் புராணப்பெருமையும் கொண்ட எங்கள் சமூகத்தில் இன்று பெரும்பாலோர் வறுமையின் பிடியில் தான் இருக்கிறார்கள். எங்கள் விஸ்வ கர்மாவில் பொற்கொல்லர், சிற்பி, தச்சர், கன்னார், கருமான், என்று ஐந்து துணைப் பிரிவுகள் உண்டு. இன்று விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக யாருக்கும் வேலை வாய்ப்பு இல்லை. தமிழ் நாட்டில் மட்டும் நாங்கள் எண்பது இலட்சம் மக்கள் இருக்கிறோம். இவர்களில் மூன்று சதவீதம் பேரே கல்வி அறிவு பெற்றவர்களாக உள்ளனர். அதிலும் பெண்கள்தான் அதிக அளவில் படித்துள்ளனர். பாரம்பரியமாக தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு வேலை வாய்யப்புகள் இல்லை. அரசியல் அங்கீகாரமும் இல்லை. இந்த சூழலில்தான் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்காக கோவில் திருப்பணி வேலைகளை எங்கள் அறக்கட்டளை நிதியை கொண்டு செய்யத் துவங்கினோம்" என்கிறார் முருகசெல்வம்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் வடக்கு கோபுரம், மீனாட்சி அம்மன் சன்னதி விமானம் தங்க முலாம் மற்றும் வடபழனி முருகன் கோவில், நங்க நல்லூர் ஆஞ்சநேயர் கோவில், திருப்பரங்குன்றம் முருகன் கோவில், நாமக்கல் ஆஞ்சநேயர் கோவில், திருக்கொள்ளிகாடு பொங்குசனீஸ்வரர் கோவில் என்று ஏராளமான பெரிய, சிறிய கோவில்களுக்கு திருப்பணி செய்திருக்கிறார் முருகசெல்வம். இதன் மூலம் வேலை வாய்ப்பின்றி தவித்த ஆயிரக்கணக் கான விஸ்வகர்மா பிரிவினருக்கு வேலை வாய்ப்பை கொடுத்திருக்கிறார். இவரது யோகி ராம் சூரத் குமார் மெடிக்கல் பௌண்டேஷன் ஒரகடத்திலும் மற்றும் வில்லிவாக்கத்திலும் லயன்ஸ் கிளப்புடன் இணைந்து டயக்நோஸ்டிக் சென்டர் மற்றும் மருத்துவ ஆலோசனை மையம் நடத்தி வருகிறது. அங்கே சி.டி. ஸ்கேன் மற்றும் அனைத்து பரிசோதனைகளும் மிக குறைந்த கட்டணத்தில் செய்யப்படுகின்றது. எல்லா சோதனைகளுக்கும் வெளியில் வாங்குவதைவிட ஐந்தில் ஒரு பங்கு தான் இங்கு கட்டணமாக வைத் திருக்கிறார்கள். இந்த பௌண்டேஷன் மூலமாக

ADVT



இலவச பொது மருத்துவ முகாம், கண் சிகிச்சை முகாம் என நிறைய நலவாழ்வு முகாம்கள் நடத்துகிறார்கள்.

மருத்துவ உதவிகள் இது போல ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க முருகசெல்வத்தின் தந்தை, தாயின் பெயரில் உள்ள தர்மலிங்கம் நாகம்மாள் கல்வி அறக்கட்டளை மூலம் ஏராளமானோருக்கு கல்வி உதவி தொகை கொடுத்து வருகிறார்கள். தூத்துக்குடி மாவட்டம் கயத்தாரைரைச் சேர்ந்த பொறியியல் படிக்கும் மாணவி பூமாரி, பழனி பகுதியை சேரந்த ஆசிரியர் பயிற்சி படிக்கும் தனலட்சுமி, சிதம்பரம் பகுதியை சேர்ந்த பொறியியல் படிக்கும் மாணவன் தியாகராஜன் ஆகியோர் இந்த அறக்கட்டளை மூலம் படித்து வருகிறார்கள். "எனக்கு தந்தை கிடையாது. மிகவும் கஷ்டமான சூழல். முருகசெல்வம் ஐயாவின் அறக்கட்டளை தான் எனக்கு ஒளிவிளக்காக உதவுகிறது" என்கிறார்கள் பூமாரியும், தனலட்சுமியும். குமரி மாவட்டம் காணிமடத்தில் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு தையல் மற்றும் கணிணி பயிற்சியும் கொடுக்கிறார்கள்.

திருமண வரன்களுக்கான வலைத் தளங்களில் இப்பொழுது அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதன் காரணமாக நடுத்தர மற்றும் கீழ்தட்டு மக்களும் கூட இது போன்ற வலை தளங்களை பயன்படுத்தும் வாய்ப்பில்லாமல் இருக்கிறார்கள். எனவே பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்தும் வகையில், முற்றிலும் இலவச திருமண தகவல் வலைத்தளம் (www.viswakarmavivaagam.org) ஒன்றும் நடத்துகிறார் முருகசெல்வம். இதன் மூலம் மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட திருமணங்கள் நடந்திருக்கிறன. விஸ்வகர்மா சமூக ஜோடிகளுக்கு அறக்கட்டளை செலவில் திருமணமும் செய்து வைக்கப்படுகிறது. "எங்கள் சமூகம் கல்வி மற்றும் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அறக்கட்டளை துவக்கினோம். ஆனால் இப்போது எந்த வித பேதமும் இல்லாமல் அனைவருக்கும் உதவிகள் செய்து வருகிறோம்" என்று பெருமிதத்தோடு சொல்கிறார் முருகசெல்வம். அறக்கட்டளைக்காக யாரிடமும் இவர் நன்கொடை வாங்குவதில்லை. தனது உழைப்பின் மூலம் கிடைக்கும் பணத்தையே அறக்கட்டளை செலவுகளுக்கு பயன்படுத்துகிறார். முருகசெல்வம் அவர்கள் அகில பாரத விஸ்வகர்மா மகாசபாவில் தேசியப் பொதுச்செயலாளராக இருக்கிறார்.

கடந்த டிசம்பர் மாதம் வெள்ளத்தின் போது தனது வீட்டில் வெள்ள நீர் புகுந்தாலும் அதை பொருட்படுத்தாது பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவு, அரிசி, மருந்துகள், பால் என்று கொடுத்து அனைத்து தரப்பு மக்களின் பாராட்டுகளையும் பெற்றிருக்கிறார் முருகசெல்வம்.

**MASTER HEALTH CHECK-UP @ Rs.1499.00**

| | | | |
|---|---|---|---|
| CT Brain Scan | 800.00 | Ultra Sound Scan | 300.00 |
| CT Chest Scan | 1200.00 | Doppler Study | 750.00 |
| | | Digital X-Ray | 150.00 |
| CT Whole Abdomen | 1700.00 | ECG | 75.00 |

**LAB**

| | | | |
|---|---|---|---|
| Fasting | 15.00 | Urea, Creatine, Total Chols (Each) | 40.00 |
| Sugar P.P. | 15.00 | Electrolyte | 125.00 |
| Blood Grouping | 20.00 | HBAIC | 125.00 |
| HB | 15.00 | Urine Complete anyalyse | 50.00 |
| E.S.R., TC, DC (Each) | 15.00 | Urine Culture | 100.00 |

ALL SPECIALIST DOCTORS AVAILABLE

All Diagnostic Facilities available

All Diagnostic at Very Lowest Cost

ADVT